ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/43 - 2016 සැප්තැම්බර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.09.29

*1986/43 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 22 (4) ஆம் பிரிவின் அடிப்படை நியதிகளிலான அனுமதி**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 22 (4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதிலுள்ள பிரிவு 3 இன் கீழ், 2016 ஓகத்து 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பொருட்களின் ஏற்றுமதியாளர்களுக்கு இத்தால் இவ்வறிவித்தல் வழங்கப்படுகிறது.

1. பொருட்களின் ஏற்றுமதிக்காக பெறப்பட்ட கொடுப்பனவுகள் ஏற்றுமதி செய்யப்பட்ட திகதியிலிருந்து 120 நாட்களுக்குள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும் ;

2. இக்கட்டளையின் ஏதேனும் மீறலுக்கெதிரான நடவடிக்கையினைத் தொடுப்பதற்கு முன்னதாக, 120 நாட்களும் முடிவடைந்ததன் பின்னர் இலங்கை மத்திய வங்கியினால் 30 நாட்களைக் கொண்ட சலுகைக் காலமொன்று வழங்கப்படலாம் ;

3. ஒவ்வொரு ஏற்றுமதியுடனும் தொடர்பான ஆவணச் சான்றுகள், கொடுப்பனவுகளைப் பெறுகின்ற தொடர்பான அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு அல்லது வேறு ஏதேனும் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

ரி. எம். ஜே. வை. பி. பர்னாந்து,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
2016 செத்தெம்பர் 29.

10– 374



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.